நாள்: **09.01.2024**

**O.S. No. 60/2022**

**வா.சா.1**

**பெயர்: ராமச்சந்திரன், த/பெ. வெங்கடாஜலம்**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள முகவரியில் தான் நிரந்தரமாக வசித்து வருகிறேன் என்றால் சரிதான். என்னுடைய மகனும், மகளும் எங்கு வசித்து வருகிறார்கள் என்றால் எனது மகன் என்னுடன் தான் வசித்து வருகிறார். மகளுக்கு திருமணமாகிவிட்டது. தாவா சொத்து நான் குடியிருந்து வரும் வீட்டிலிருந்து சுமார் 15 கி.மீ தொலைவு இருக்கும் என்றால் சரிதான். தாவா சொத்து 15.03.2006 ம் தேதியன்று நான் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். மற்றொரு சொத்து 1990 ல் தமிழ்செல்வி என்பவரிடமிருந்து கிரயம் பெற்றேன். எனக்கும், எனது சகோதரருக்கும் இடையே பாகப்பிரிவினை சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் 15 வருடங்களுக்கு முன்பாகவே பாகப்பிரிவினை ஆகிவிட்டது. 2005 ல் பாகப்பிரிவினை ஏற்பட்டது. 2006 ல் தான் இந்த தாவா சொத்து வாங்கினேன். 2006 லிருந்து சாகுபடி செய்து வருவதாக சொல்வதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

ஒம் /- S. விஜய் ஆனந்த்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாரூர்.